1972 டிசம்பர் 14]

அங்கெல்லாம் ஊராட்சி நிர்வாக அதிகாரிகள் அந்தப் பணியினை மேற்கொண்டு செயல்படுகிறார்கள். ஆனால் துப்புரவாளர்களை போட்டுக்கொள்ளக்கூடிய நிதி வசதியுடைய ஊராட்சி ஒன்றியங்கள் அதுபற்றி வேண்டுமென்று கேட்டால் பரிசிலனை செய்யலாம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: ஊராட்சி மன்றங்களில் பணிபுரியும் துப்புரவாய்வாளர்கள் மன்றத் தலைவர்களின் ஆணைகளை மதிக்காமல் செயல்பட்டு வருவதை அரசு அறியுமா? ஆகவே துப்புரவாய்வாளர்களை மன்றத்தின் நேரடி நிர்வாகத்தின்கீழ் இ.ஓ., பெருந்தலைவர் ஆகியவர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா? மன்றம் ஏகோபித்து ஒரு தீர்மானம் போட்டால் அந்த இடத்தில் உள்ள துப்புரவாய்வாளரை உடனடியாக அந்த இடத்தை விட்டு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துப்புரவாய்வாளர்களின் பணிகளைக் கட்டுப்படுத்தி, வேலை வாங்கிக் கொள்கிற பொறுப்பு ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஆணையாளரிடம்தான் இருக்கிறது. எங்காவது மதித்து நடக்காமல் இருக்கிறார்கள் என்றால் அது நல்வாழ்வுத்துறையின் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டால் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். காரணம் இன்றைக்கு அவர்களை நியமிக்கிற பொறுப்பினை நல்வாழ்வுத்துறை தான் வைத்துக் கொண்டிருக்கிறது.

சென்னை மாநகரிலுள்ள சிலைகள் பராமரிப்பு

*165. வினா—புலவர் சி. பழனிச்சாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் உள்ள சிலைகளை எல்லாம் அடிக்கடி சுத்தம் செய்வதற்கு மாநகராட்சி மூலம் பணியாளர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

புலவர் சி. பழனிச்சாமி: வள்ளுவர், காந்தியடிகள், அண்ணா போன்றவர்களின் சிலைகளில் உட்கார்ந்து பறவைகள் எச்சமிட்டு அசுத்தப்படுத்துகின்றன. அதைப் பார்க்கும்போதே மனதிற்கு வேதனையாக இருக்கிறது. எனவே மாதத்திற்கு ஒரு முறை, இருமுறை அவைகளைச் சுத்தம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இரண்டாவது உலகத் தமிழ் மகாநாட்டின்போது அமைக்கப்பட்ட சிலைகளை பொதுப்பணித் துறை கவனித்துக் கொண்டு வருகிறது. மற்ற சிலைகளைக் கவனித்துக் கொள்கிற பொறுப்பு மாநகராட்சியிடம் இருக்கிறது. சரியான முறையில் அவற்றைப் பாதுகாக்க பொதுப்பணித் துறையும் மாநகராட்சியும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. ஆ. பரந்தாமன் : கடந்த சில நாட்களாக வன்முறையாளர்களுக்கு என்னவோ தமிழ்நாட்டில் உள்ள சிலைகளின் மீது கோபம் வந்துகொண்டிருக்கிறது. சிலைகளை உடைத்துப் போடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களிடம் இருந்து சிலைகளைப் பாதுகாக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பொதுவாக வைக்கப்பட்டுள்ள எல்லாச் சிலைகளையும் பாதுகாக்க காவல் துறையினர்களும், நகராட்சி மன்றங்களும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் வருகின்றன, வன்முறையாளர்கள் எந்தயிடத்தில் வைக்கப்பட்ட சிலையாக இருந்தாலும், அதை உடைக்க முற்பட்டால் காவல்துறையினர் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்கின்றனர்.

திரு. எம். தேவராசன் : பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் சின்னமாக இன்னமும் விளங்கிக் கொண்டிருக்கிற சிலைகளை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்திய மக்களின் சுதந்திர உணர்ச்சிக்கு விரோதமாக இருந்த அன்னியர்களின் சிலைகள், இந்திய மக்களின் வெறுப்புக்குள்ளான அன்னியர்களின் சிலைகள் ஏற்கெனவே அப்புறப்படுத்தப் பட்டுவிட்டன. ஆயினும் இந்திய மக்களின் நன்மைக்காகப் பாடுபட்ட அன்னியர்களின் சிலைகள்—சர் தாமஸ் மன்றோ போன்றோரின் சிலைகள்—பழைய வரலாற்றை நினைவுபடுத்துகின்ற, தொடர்ப்புபடுத்துகின்ற சின்னமாக இன்னமும் இருக்கின்றன.

திரு. என். கிட்டப்பா : நகராட்சிப் பகுதிகளில் சிலைகளை வைக்கும்போதே அவற்றைப் பராமரிக்கின்ற பொறுப்புக்கும் நிதிவசதி செய்யப்படுகிறது. இருந்தும் கூட சில நகராட்சிகள் அந்தப் பகுதியில் வைக்கப்பட்ட சிலைகளைச் சரிவர பராமரிக்காவிட்டால் அவர்கள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எந்த இடத்தில் எந்தச் சிலை சரியான முறையில் பாதுகாக்கப்படவில்லை என்கிற விவரத்தை அளித்தால் நல்லது. தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

1972 டிசம்பர் 14]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அண்மையில், தந்தை பெரியார் அவர்களுடைய சிலை ஒரு குறிப்பிட்ட நகரத்தில் சேதப்படுத்தப்பட்டிருப்பதை அரசு அறியுமா? அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதிலே ஈடுபட்டிருப்பவர்கள் மீது முறைப்படி காவல் துறையினர் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். மேலும் சிலையைப் பழுதுபார்த்து சீர்படுத்துவதற்கான முயற்சியை அந்த நகராட்சி மன்றத்தினரும், அந்த நகரிலுள்ள பெருமக்களும் மேற்கொண்டிருக்கிறார்கள்.

தொத்துநோய் சிகிச்சைக்கு தனி மருத்துவ நிலையங்கள்

*166. வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொத்து நோய்களுக்கென தாலுகா தலைநகரங்களில் தனி மருத்துவ நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இப்பொழுதுள்ள மாதிரி, புயல், வெள்ளம் வருகின்ற காலத்தில், காலரா, அம்மை போன்ற தொத்து நோய்கள் பரவுவதற்கு ஏதுவாக ஆகிவிடுகிறது. ஆனால், பொது மக்களிலே பலபேர் இந்த நோய்களைத் தடுப்பதற்கு மருத்துவ மனையை அடையாமல், மாரியம்மா விடத்திலும், காளியம்மாவிடத்திலும் சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே, குறிப்பிட்ட முறையில், ஒவ்வொரு தாலுகா தலைநகரத்திலாவது இத்தகைய தொத்துநோய் பரவாமல் தடுக்கும் முயற்சிகளை எடுக்க அரசு இனியேனும் முயற்சிகள் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தொத்து நோய்களைப் பற்றி அடிப்படையான கருத்து, தொத்து நோய் பரவி வருகின்ற காலத்தில், மக்களுக்குத் தடுப்பு ஊசியைப் பரவலாக போடுகின்ற திட்டத்தை நிறைவேற்றுகின்ற நோக்கத்துடன்தான், அண்மையில், தஞ்சையில் ஏற்பட்ட புயலுக்குப் பின் அங்கே காலரா தடுப்பு ஊசி, ஆயிரக்கணக்கான மக்களுக்குப் போட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் காலரா போன்ற தொத்து நோய்க்கு ஆளானவர்கள், அந்த நோயினை மறைத்து விடுவார்களானால்